[6th July 1962

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தொழில் வரி என்பது வருமான வரி போன்றதல்ல என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

Power-cut

*162 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Electricity Board for averting any possible power-cut during the current summer season?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, both the question and the answer are out of date. Still I will read the answer. By maintaining maximum generation at Thermal stations at Madras and Samayanallur during the months preceding the summer season, maximum quantity of water has been conserved particularly in the Hydro-Reservoirs intended purely for power generation.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: ஸார், இந்தக் கேள்வியும் பதிலும் காலம் கடந்தது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருப்பினும் இந்தக் கேள்வியைப் போட்ட பிறகும் அமைச்சர் பதில் அளித்த பிறகும், நமது ராஜ்யத்தில் இருக்கின்ற நிலையானது நம்முடைய மின்சார வசதிகள் எவ்வளவு ஆபத்தான நிலையில் இருக்கிறது என்பதை இப்போது எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே இந்த மின்சாரத் தட்டுப்பாட்டை அடியோடு நீக்கி விடுவதற்காக இங்கு ஓர் அணு மின்சார நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டு வருகிறது. அது இப்போது எந்த நிலையில் உள்ளது என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன். அதோடு மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிச்சயமாக இதைச் சேர்க்க வேண்டும் என்று நமது அரசாங்கம் வற்புறுத்துவார்களா என்பதையும் அறிய வேண்டுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எந்தவிதமான கஷ்டம் வந்தாலும் அதில் ஓர் நன்மை இருக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அந்தமாதிரி இப்போது ஏற்பட்டிருக்கும் "பவர்-கட்" நமக்கு அணு மின்சாரம் வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. சா. கணேசன்: அணு மின்சாரத்தோடு, அனல் மின்சாரத்தையும் நாடு பூராவிலும் பரவலாக விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அனல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நிலக்கரி வேண்டும். நிலக்கரியை நாம் வட இந்தியாவிலிருந்து கொண்டு வருவதற்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன என்பதும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அதோடு உற்பத்திச் செலவும் அதிகமாகிவிடுகின்றது. அதனால் தான் இது விஷயமாக இன்னும் நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது.